**செப்டம்பர் – 08**

# TNPSC துளிகள்

- தகவல் தொழில்நுட்ப மையமான ஹைதராபாத்தில் நிஜாமி நகரத்தில் சுவீடனைச் சேர்ந்த வீட்டு அலங்காரப் பொருள் சில்லறை விற்பனையாளரான ஐகியா என்ற பன்னாட்டு நிறுவனம், தனது முதல் இந்திய விற்பனையகத்தை திறந்துள்ளது.
- இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் பெங்களூரு விண்வெளி கண்காட்சியின் 6வது பதிப்பானது இஸ்ரோ தலைவர் டாக்டர் K. சிவனால் தொடங்கி வைக்கப்பட்டது. பெங்களூருவில் நடத்தப்பட்ட இந்த மூன்று நாள் கண்காட்சி இந்திய விண்வெளித் திட்டத்தில் தொழிற்துறை பங்களிப்பினை உயர்த்திக் காட்டும்.
- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, 12வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தையும் தாண்டி 2017-18 முதல் 2019-20 வரையில் மத்திய அரசு ஆதரவு பெற்ற சிறப்புத் திட்டமான வனவுயிர் வாழ்விடங்களுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தை (Integrated Development of Wildlife Habitats) தொடரச் செய்ய ஒப்புதலளித்துள்ளது.
    - இத்திட்டம் மத்திய அரசின் ஆதரவுத் திட்டமான புராஜக்ட் டைகர், புராஜக்ட் எலிபென்ட் மற்றும் வனவுயிர் வாழ்விட மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியது.
- தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தேசியத் தலைநகரில் நிலத்தடி நீரை புதுப்பித்து மேம்படுத்தச் செய்வதற்கான குறிப்பிட்ட காலத்தை இலக்காகக் கொண்ட செயல்திட்டத்தை தயாரித்திட முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையிலான கண்காணிப்புக் குழு ஒன்றை ஆரம்பித்துள்ளது.
- பிரதமரின் தலைமையில் புதுதில்லியில் 31வது மத்திய ஹிந்திக் குழுவின் சந்திப்பு நடத்தப்பட்டது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பீமல் ஜலன் என்பவரை இந்தியாவின் அடுத்த தலைமை பொருளாதார ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பதற்கான பணிக்காக அமைக்கப்பட்ட தேடுதல் குழுவிற்கு தலைவராக மத்திய அரசு நியமித்துள்ளது.
    - முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியன் அப்பதவியிலிருந்து விலகிய பிறகு பீமல் இத்தேடுதல் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.
- Dataset Search என்ற புதிய தேடல் இயந்திரத்தை கூகுள் ஆரம்பித்திருக்கின்றது. இது விஞ்ஞானிகள், தகவல் பத்திரிக்கையாளர்கள் மற்றும் மற்றவர்கள் தங்கள் பணிக்காக தேவைப்படும் தகவல்களை பெற உதவிடும் வகையில் பலதரப்பட்ட மொழிகளில் இது இயங்கிடும்.
- அணுசக்தி பாதுகாப்புப் பட்டியலைப் பொறுத்தவரையில் அணுப்பொருட்களை கொண்டு உபயோகிக்கப்படும் ஆயுதங்களை உடைய நாடுகளின் பட்டியலில் “களவுத் திருட்டுக்கான தரவரிசை” (Theft Ranking) என்ற வகையில் இந்தியா 19வது இடத்தில் உள்ளது.
    - ஆஸ்திரேலியாவும் சுவிட்சர்லாந்தும் ஆயுதங்களுடன் கூடிய அணுசக்தி பொருட்களை உடைய சக நாடுகளின் மத்தியில் முதலிடங்களைப் பிடித்துள்ளன.
- இந்தியாவும், பிரான்சும் மூன்று இந்திய நகரங்கள் (நாக்பூர், கொச்சி மற்றும்

அகமதாபாத்) பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வினை குறைக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவும் வண்ணம் "உங்கள் நகரத்தை தயாராக்குங்கள்" என்ற ஒரு செயல்படுத்து ஒப்பந்தத்தை கையெழுத்திட்டுள்ளன.

- இந்திய இரயில்வேத் துறையில் "வியாபாரம் செய்வதை எளிமையாக்கல்" முறையை மேம்படுத்த தேசிய போக்குவரத்து நிறுவனமானது (இரயில்வே) ஒரு முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது. பியூஸ் கோயல் தலைமையிலான இரயில்வே அமைச்சகம் இந்திய இரயில்வேயின் மின்னணு கொள்முதல் அமைப்பு ஆபூர்த்தி (Indian Railways e-procurement system -IREPS என்ற கைபேசி செயலியை வெளியிட்டுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சர் புதுதில்லியில் 3 நாட்கள் நடைபெறும் இராணுவ மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு கண்காட்சி மற்றும் மாநாடு 2018 என்ற ஒன்றை துவக்கி வைத்துள்ளார்.
    - இது மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சகத்தாலும் PHD வர்த்தக மற்றும் தொழிற்சாலை சங்கத்தாலும் இணைந்து நடத்தப்பட்டது.
- மத்திய இரயில்வே அமைச்சர், உத்திரப்பிரதேச முதல்வருடன் இணைந்து லக்னோவில் "கும்பமேளா 2019" (www.kumbhmela.gov.in) என்ற அதிகாரப் பூர்வ இணையதளத்தை துவக்கி வைத்தார். மேலும் அவர்கள் இந்த கும்பமேளா தொடர்பான சமூக ஊடக செயலி ஒன்றையும் துவக்கி வைத்தனர்.
    - இது சுற்றுலாப் பயணிகளுக்கும் புனித யாத்ரீகர்களுக்கும் மேளா தொடர்பான அனைத்து தேவையான தகவல்களான இட வசதி, இரயில் வண்டிகள், வானிலை, போக்குவரத்து மற்றும் தங்கும் வசதி ஆகியவற்றை அளிக்கும்.
- 16 வயதான சௌரப் சௌத்ரி, தென் கொரியாவின் சாங்வான் நகரத்தில் நடைபெறும் ISSF உலக துப்பாக்கிச் சூடு சாம்பியன் போட்டியில் உலக இளையோர் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். 10 மீட்டர் ரக பிஸ்டல் பிரிவில் முன்பு தான் ஏற்படுத்திய உலக சாதனையை இம்முறை தாமே முறியடித்துள்ளார்.

# தேசியச் செய்திகள்

## மகாத்மா காந்தியின் நயி தலீம் மீதான புத்தகம்

- மகாத்மா காந்தியின் நயி தலீம் (அடிப்படைக் கல்வி) என்பதன் அடிப்படையிலான அனுபவக் கல்வி பற்றிய புத்தகம் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சரால் வெளியிடப்பட்டது.
- இது காந்தியின் நயி தலிம் கொள்கையின் அடிப்படைக் கருத்துக்களோடு ஆசிரியர்களுக்கான பயிற்சி மேம்பாட்டுத் திட்டங்களையும், D.Ed. B.Ed மற்றும் பள்ளிகளுக்கான கல்வி பாடத்திட்டத்தையும் கொண்டிருக்கின்றது.
- மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் துறைகளின் ஒப்புதலோடு 13 மொழிகளில் ஒரே நேரத்தில் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## அடல் பென்சன் யோஜனா திட்டம் - விரிவாக்கம்

- மத்திய அமைச்சரவை 2018-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்துடன் முடிவடைந்த அடல் பென்சன் திட்டத்தை காலவரையறையின்றி நீட்டிக்க முடிவெடுத்துள்ளது. மேலும் இது

இத்திட்டத்தின் வரம்பை விரிவுபடுத்தி அத்திட்டத்தை ஒரு திறந்தவெளித் திட்டமாக தக்கவைத்துள்ளது.

- மேலும் மக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் இதில் பங்கேற்பதற்கான வயது வரம்பு திருத்தப்பட்டுள்ளது. பதிவு செய்வதற்கான வயது 60 வயதிலிருந்து 65 வயதாக உயர்த்தப்பட்டுள்ளது.
- மேலும் 2018ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்கு பிறகு ஆரம்பிக்கப்பட்ட அனைத்து கணக்குகளும் விபத்து காப்பீட்டிற்கான வரம்பாக முன்பு இருந்த 1 லட்சம் ரூபாய் நிலையிலிருந்து இரு மடங்காக 2 லட்ச ரூபாய் என்ற நிலையைக் கொண்டிருக்கும்.
- இத்திட்டத்தின் மிகைப் பற்று வசதியும் 5000 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக மாற்றப்பட்டுள்ளது.

## முதல் உலகளாவிய இடப்பெயர்வு மாநாடு 2018

- இந்தியாவின் முதலாவது உலகளாவிய இடப்பெயர்வு மாநாடான “MOVE” புதுதில்லியில் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் தேதி பிரதமரால் துவக்கி வைக்கப்பட்டது.
- இந்த இரண்டு நாள் மாநாடு நிதி ஆயோக்கால் நடத்தப்பட்டது.
- இம்மாநாடு மின்மயப்படுத்துதல் மற்றும் மாற்று எரிபொருட்கள், பொதுப் போக்குவரத்தை புனரமைத்தல், சரக்குப் போக்குவரத்து மற்றும் தளவாட வசதி, தகவல் பகுப்பாய்வு, இடப்பெயர்வு ஆகிய ஐந்து கருத்துருக்கள் மீது விவாதங்கள் மேற்கொள்ளும்.

# சர்வதேசச் செய்திகள்

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

- துருக்கியின் இஸ்மிர் நகரில் ஆரம்பிக்கப்பட்ட 87வது இஸ்மிர் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் இந்தியா பங்களிப்பாளர் நாடாகும்.
- இந்தக் கண்காட்சியில், இந்தியா துருக்கிக்கான தனது ஏற்றுமதியை அதிகப்படுத்தும் ஒப்பந்தங்களை ஏற்படுத்தும் நோக்கில் 75 இந்திய நிறுவனங்களைக் கொண்டு ஒரு மிகப்பெரிய வியாபார கூடாரமான “Source India” என்ற முகப்பையும் துவக்கி வைக்க இருக்கின்றது.
- இந்தியாவின் ஏற்றுமதிகளை அதிகப்படுத்த உலகம் முழுவதும் முக்கிய வர்த்தகக் கண்காட்சிகளை நடத்திக் கொண்டிருக்கும். இந்திய வர்த்தக மேம்பாட்டுக் குழுவின் “Source India Partitions” என்ற வரிசையின் ஒரு பகுதி இதுவாகும்.
- இந்திய வர்த்தக மேம்பாடு குழுவானது (Trade Promotion Council of India) மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள வர்த்தகத் துறையின் வர்த்தக மற்றும் முதலீட்டிற்கான மேம்பாட்டு அமைப்பாகும்.

### உலக இந்து மாநாடு (World Hindu Congress – WHC)

- அமெரிக்காவில் சிகாகோ நகரத்தில் மூன்று நாட்கள் நடைபெறும் உலக இந்து மாநாட்டின் இரண்டாவது பதிப்பு நடத்தப்பட்டது.




- 1893-ம் ஆண்டு உலக சமய மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட விவேகானந்தரின் வரலாற்றுச் சிறப்புடைய சொற்பொழிவின் 125வது ஆண்டு நிறைவு தினத்தை குறிப்பிடும் வகையில் இது நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### அதிக உயர கண்காணிப்பிற்கான சிறியரக ஆளில்லா ஆகாய வாகனம்

- இந்திய தரைப்படை அதிக உயர கண்காணிப்பிற்காக SpyLite என்ற சிறியரக ஆளில்லா ஆகாய விமானத்தை (Unmanned Aerial Vehicle - UAV) தேர்ந்தெடுத்திருக்கின்றது.
- இந்தச் சிறியரக ஆளில்லா ஆகாய விமானம் இந்தியாவின் சியன்ட் நிறுவனம் (Cyient) மற்றும் இஸ்ரேலின் புளுபேர்டு ஏரோ சிஸ்டம் (Blue Bird Aero System) ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான சியன்ட் தீர்வுகள் மற்றும் அமைப்புகள் என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டதாகும்.
- SpyLite என்ற வாகனம் 4 முதல் 5 மணி நேரம் வரையிலான தாங்கும் சக்தியையும், அதிகபட்ச பறக்கும் உயரமான 30000 அடிகள் என்ற வரம்பையும் கொண்டு, சியாச்சின் பனிமலை மற்றும் சீனாவின் எல்லைப் பகுதிகளின் மீதான நடவடிக்கைகளுக்கு உகந்ததாக உள்ளது.

## மாநிலச் செய்திகள்

### ஆயுஷ்மான் பாரத் – ஜன ஆரோக்கிய யோஜனா

- 2018 செப்டம்பர் 6-ம் தேதி ஜம்மூவில், ஏழை மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட மற்றும் மூன்றாம் கட்ட மருத்துவ வசதிகளை அளிக்கும் ஆயுஷ்மான் பாரத் – பிரதான் மந்திரி ஜன ஆரோக்கிய யோஜனா திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- இத்திட்டம் வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 5 லட்ச ரூபாய் என்ற அளவில் மாற்றிக்

கொள்ளக்கூடிய (Portal) மருத்துவ வசதியை அளிக்க எண்ணுகின்றது. மேலும் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு பயனாளி நாடு முழுவதும் உள்ள எந்த ஒரு அரசு அல்லது தனியார் மருத்துவமனையிலும் கட்டணமில்லாத சிகிச்சை வசதியை பெற அனுமதிக்கப்படுவார்.

- இத்திட்டம் செப்டம்பர் 25-ம் தேதி நாடு முழுவதும் பிரதமரால் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

## பஞ்சாயத்து ராஜ் திருத்த மசோதா

- ராஜஸ்தான் மாநில சட்டசபை, ராஜஸ்தான் பஞ்சாயத்து ராஜ் (திருத்தம்) மசோதா, 2018 என்ற மசோதாவை நிறைவேற்றியுள்ளது. இம்மசோதா பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிடுபவர் இரு குழந்தை மட்டும் கொண்டிருக்க வேண்டும் என்ற விதியை இரு குழந்தைகளில் ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருக்கும் பட்சத்தின் காரணம் கொண்டு தளர்த்துகின்றது.
- மேலும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களும் பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிடும் வண்ணம் ஒரு திருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இம்மசோதா ஏற்கனவே உள்ள சட்டத்தின் கீழ் உள்ள "ஒரு நபர் தொழுநோயால் பாதிக்கப்பட்டால் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட தகுதி மறுக்கப்படுவார்" என்ற விதியை நீக்குகின்றது.
- ஏற்கெனவே உள்ள சட்டத்தின்படி, ஒருவர் இரு குழந்தைகளுக்கு மேல் பெற்றிருந்தால் அவர் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்படுவார். இவ்விதி மாற்றுத் திறனாளி குழந்தைக்கென்று எவ்வித விதிவிலக்கையும் கொண்டிருக்கவில்லை.

- - - - - - - - - - -